
www.tamilarangam.net

# பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்போம்!



## ஈ.பி.டி.பியின் நடைமுறைச் சாத்தியமான அரசியல் நிலைப்பாடு!





என்றும் நாம் மக்களுக்காக...

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலான உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக, தமிழ் பேசும் மக்கள் மிக மோசமான இழப்புகளை கண்டுள்ளனர். யுத்தத்தின் விளைவினால் களைப்புற்றுள்ள தமிழ் பேசும் மக்கள், யுத்த சூழலை வெறுப்பதுடன் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரும் அரசியல் தீர்வொன்றை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

தமிழ் பேசும் மக்களில் பெரும்பான்மையினர் வன்முறைகளுக்கும், நாட்டைப் பிளவுபடுத்தும் நடவடிக்கைகளுக்கும் எதிரானவர்களாகவே உள்ளனர். எரிந்து கொண்டிருக்கும் இனப்பிரச்சினைக்கு நியாயமானதும், நிரந்தரமானதுமான தீர்வொன்று எட்டப்படல் வேண்டும் என்பதே தமிழ்பேசும் மக்களது விருப்பமாகும்! அர்த்தமுள்ள அரசியல் தீர்வையே எமது மக்கள் கோரி நிற்கிறார்கள்! தென்னிலங்கை சிங்கள மக்களும் அமைதியான வாழ்வையே விரும்புகின்றனர்.

அரசியல் பேச்சுவார்த்தைகளின் ஊடாக, நடைமுறைச்சாத்தியமான வழியில், படிப்படியாக உறுதியான தீர்விற்கான அடித்தளம் இடப்பட வேண்டுமென்பதே யதார்த்தமானதாகும். இதுவே உலக அரசியல் வரலாறாகவும் உள்ளது. எதிரும் புதிருமாக ஆண்டாண்டு காலமாய் முரண்பட்டு, இரத்தம் சிந்தியும் நாட்டின் தேசிய இனப்பிரச்சினையை தீர்க்க முடியவில்லை என்கிற உண்மையை வரலாறு நமக்கு தெளிவாக உணர்த்தியுள்ளது.

இலங்கை நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான வழிவகைகள் சர்வதேச சமூகத்தின் ஆதரவுடன் தற்போது இரண்டறக் கலந்துள்ளது. பேச்சுவார்த்தையின் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்ற அழுத்தம் என்றும் இல்லாத வகையில் தற்போது சர்வதேச மட்டத்தில் அதிகரித்துள்ளது. இதுதவிர யுத்தத்தின் வலி என்பதை அனைத்து இன மக்களும் இன்று உணர்ந்து நிற்கின்றனர். உண்மையான சமாதானத்தின் மீது மக்கள் பெரிதும் நாட்டம் கொண்டவர்களாக உள்ளனர்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும், 1995ம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்வுத் திட்ட யோசனைகளையும் நிராகரித்து, அதனை அமுல்படுத்த தடையாக இருந்தவர்கள்தான், சமாதானத்தின் உண்மையான இன்றைய எதிரிகளாவர். தமிழ் பேசும் மக்களுக்கு அவர்களது தாயக உரிமையை அரசியல் அமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தி அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை நிலைநிறுத்திய இலங்கை இந்திய ஒப்பந்தத்தை நிராகரித்து, அதனை அமுல்படுத்துவதற்கு முட்டுக்கட்டை போட்டு குழப்பியடித்ததன் மூலம், புலிகள் தமிழ் பேசும் மக்களுக்கு துரோகமிழைத்த உண்மையை எவராலும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்திலும், சந்திரிகா அம்மையாரின் தீர்வுத் திட்டத்திலும் நல்ல பல அம்சங்கள் இருந்தன என்று புலிகளின் அன்டன் பாலசிங்கம் பின்னர் ஒப்புக் கொண்டதன் மூலம் - அதிகாரப்பகிர்வுத் தீர்வின் அமுலாக்கத்திற்கு புலிகளே தடையாக இருந்தார்கள் என்பதே அப்பட்டமான உண்மையாகும். அதிகாரப்பகிர்வு என்பது மக்களின் அடிப்படை உரிமைகளோடு சம்பந்தப்பட்டதாகும். ஆகவே அதிகாரப்பகிர்வு ஏற்பாட்டை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை மக்களால் தெரிவு செய்யப்படாத தனிநபரிடம் வழங்க முடியாது.

தமிழ் மக்களின் அரசியல் தீர்விற்கு தமது அதிகாரப் பசியை காரணம் காட்டி புலிகள் தொடர்ந்தும் பல்வேறு வழிகளிலும் தடையாகவே இருந்து வருகின்றனர். மாற்று ஜனநாயக கட்சிகளையும், தமிழ்பேசும் மக்களின் அடிப்படை மனித

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உரிமைகளையும் தொடர்ச்சியாக மீறி வருகின்றனர். இன அழிப்பு படுகொலைகளின் ஊடாக தமிழனை தமிழனே கொன்றொழிக்கும் கொலைப்படலத்தை தொடர்ந்தும் நடாத்தி வருகின்றனர். யுத்த சூழலுக்கு தீமூட்டி; தமிழ் பேசும் மக்களை பலியாக்கி வருகின்றனர். புலிகளின் இன அழிப்பு செயற்பாடுகளில் இருந்து தமிழ் பேசும் மக்களை காப்பாற்றுவது இன்றைய எமது முக்கிய கடமையாகும்.

ஆகவே, நடைமுறைச்சாத்தியமான அணுகுமுறைகளோடு, நமது மக்களின் அமைதி வாழ்வை உறுதிப்படுத்துவதற்கு பேச்சுவார்த்தைகளினூடாகவே தீர்வுகாணப்படல் வேண்டுமென்பதை ஈ.பி.டி.பி தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இதுவே எமது அரசியல் நிலைப்பாடுமாகும்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் ஆயுதப்போராட்டத்தை கைவிட்டு, சமத்துவமான அடிப்படையில் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டே ஈ.பி.டி.பி. யினராகிய நாம் ஜனநாயக வழிக்கு திரும்பினோம். வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு விஷேடமான அதிகார பகிர்வையே நாம் தொடர்ந்தும் வலியுறுத்துகிறோம்.

தமிழ் பேசும் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வானது, தற்போதைய அரசியல் யாப்பினை மாற்றியமைத்து அதற்கு மாற்றாக சகல இன மக்களது அபிலாஷைகளையும் திருப்திப்படுத்தக் கூடிய, சமஷ்டி அடிப்படையிலான புதியதோர் அரசியல் யாப்பை உருவாக்குவதன் மூலமே சாத்தியமாகும் என ஈ.பி.டி.பி கருதுகிறது.

இச்சந்தர்ப்பத்தில் தேசிய இனமாகிய எமது மக்கள், ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை சந்திப்பதற்கு தயாராகி வருகிறார்கள்! எமது பிரச்சினைகளை நாமே உணர்ந்து, அதனை தீர்ப்பதற்கு செயலாற்ற வேண்டிய கட்டாயக் கட்டளை எம்முன் விரிந்து கிடக்கிறது!

கடந்த காலங்களிலும் இதுபோன்ற ஜனாதிபதித் தேர்தல்கள் நடந்திருக்கின்றன! ஆயினும் சந்தர்ப்பங்களை சரிவர பயன்படுத்த தவறிய சில தமிழ்த் தலைமைகளின் இலக்கற்ற அரசியல் வழிமுறையினால் அச்சந்தர்ப்பங்கள் சிதறடிக்கப்பட்டன.

ஈ.பி.டி.பி.யினராகிய நாம் தமிழ் பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை நடைமுறைச் சாத்தியமான முறையில் யுத்தத்தைத் தவிர்த்து, பேச்சுவார்த்தையூடாக அணுகித் தீர்ப்பதே சாத்தியமானதென நம்புகிறோம். இதனை நாம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம். எமது கருத்தினை காரிய சித்தமாக்கும் அரசியல் அதிகாரத்தையே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பேசும் மக்களிடமிருந்து கோருகிறோம்.

## எமது அணுகுமுறைதான் என்ன?

முதலாம் கட்டமாக இலங்கை இந்திய ஒப்பந்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தை உறுதியாக அமுல்படுத்தல். வடக்கு கிழக்கு மாகாண சபைக்கான ஜனநாயகத் தேர்தல் ஒன்றை நடாத்தி; வடக்கு கிழக்கு மாகாண சபையை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளிடம் கையளித்தல். இதன் மூலமாக தமிழ் பேசும் மக்களின் தேசியப்பிரச்சினையை தீர்ப்பதற்கான வழியில் முன்னோக்கிச் செல்லுதல். இதனூடாக மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்தல். தமிழ்பேசும் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளான, நாளாந்த, நிர்வாகத் தேவைகளை பூரணமாக நிவர்த்தி செய்தல். வடக்கு கிழக்கு மாகாண சபையினூடாக எமது மக்களின் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை உரிய அதிகாரத்தோடு முன்னெடுத்தல். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உடனடித் தேவைகள், மீள் குடியேற்றங்களை ஏற்படுத்தல்.

வடக்கு கிழக்கில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கி உள்ளூராட்சி நிறுவனங்களை பலப்படுத்தி; கிராம, நகர, மாநகர உள்ளூராட்சி சபைகளுக்கு உடனடியாக தேர்தல் நடாத்தி அவற்றை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளித்து இயங்க வைத்தல்.

இரண்டாம் கட்டமாக 13வது அரசியல் அமைப்புத் திருத்தத்தை மேலும் வலுப்படுத்தி வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு அதிகூடிய அதிகாரங்களை பெற்று மாகாண சபையை பலப்படுத்தல். இதனூடாக தமிழ் பேசும் மக்களுக்கு படிப்படியாக அதிகாரப் பகிர்வு மீது நடைமுறை அனுபவங்களினூடாக நம்பிக்கையை ஏற்படுத்துதல். தென்னிலங்கை சிங்கள மக்களுக்கு பிரிவினையில்லாத அதிகாரப் பகிர்வு மீதான நம்பிக்கையை நிலைநிறுத்தி இனங்கள், சமூகங்களிடையே சமத்துவமான மனோநிலையையும் உறுதிப்பாட்டையும் ஏற்படுத்தல்.

மூன்றாம் கட்டமாக சகல அரசியல் கட்சிகள், சமூகங்களின் ஒப்புதலின் ஊடாக, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வான சமஷ்டி முறையை அடைந்து கொள்ளல். இதனூடாக மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி என்கின்ற எமது மக்களின் அபிலாசையான சமஷ்டி ஏற்பாட்டை அடைந்து கொள்ளுதல். இவைதான் எமது தெளிவான அணுகுமுறைகளாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதிகாரப் பகிர்வுக்குரிய விடயங்கள் அரசியல் பன்மைத்துவ அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து முடிவெடுக்கப்படல் வேண்டும். இனிவரும் சமாதான பேச்சுவார்த்தைகளில் மனித படுகொலைகளை நிறுத்துவதற்கும் மனித உரிமை, ஜனநாயக விழுமியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இதுவே ஈ.பி.டி.பி. யினராகிய நாம் தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாசைகள் குறித்து கொண்டிருக்கும் சுருக்கமான கொள்கை நிலைப்பாடுகளாகும்!

இவற்றை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கு சரியான தலைமை கௌரவ மகிந்த ராஜபக்ஷ என ஈ.பி.டி.பி உறுதியாக நம்புகின்றது. எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆட்சிக்கு வரப்போகின்ற புதிய ஜனாதிபதி, பதவிக்கு வந்து ஒரு வருட காலத்திற்குள் அரசியல் அமைப்பு சீர்திருத்த யாப்பு ஒன்றை ஏற்படுத்தி தீர்விற்கு வழிகோல வேண்டும் என்று இன்றைய அரசியல் சூழலில், பொறுப்புடன் ஈ.பி.டி.பி கோரிக்கை எழுப்புகிறது!

மகிந்த ராஜபக்ஷ இன, மத பேதமின்றி அடிமட்ட மக்களுடன் ஒன்றிணைந்து பணியாற்றியும் பழகியும் உழைப்பால் உயர்ந்த ஒரு தலைவர். அவர் முற்போக்கான நடைமுறைச் சாத்தியமான வழிவகைகளை கொண்டிருக்கின்றார். புலிகளின் பிரச்சினை வேறு, தமிழ் பேசும் மக்களின் பிரச்சினை வேறு என்பதில் அவருக்கு தெளிவான பார்வை உண்டு. யுத்தத்தின் மூலமன்றி பேச்சுவார்த்தையின் மூலமே பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்பதில் அவர் உறுதியாக உள்ளார். தமிழ் மக்களின் மீது யுத்தத் திணிப்பை எக்காலத்திலும் மகிந்த ராஜபக்ஷ மேற்கொண்டவர் அல்ல. மிக வெளிப்படையாகவே அவர் அனைத்துப் பிரச்சினைகளையும் அணுகி தீர்க்க விரும்புகிறார். அவர் இலங்கை பலஸ்தீன நட்புறவு கழகத்தின் தலைவராக நீண்டகாலம் செயலாற்றியவர். கடந்த 35 வருடங்களுக்கு மேலாக உலகில் பல்வேறு பாகங்களிலும் நடைபெற்ற மக்கள் போராட்டங்களை உறுதியாக ஆதரித்தவர்.

எமது மக்களின் அரசியல் அபிலாசைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வரும் ஈ.பி.டி.பி யினரான நாம், புதிய அரசியல் யாப்பில் பின்வரும் அம்சங்கள் உள்ளடக்கப்படல் வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தி உள்ளோம்.

(1) புதிய அரசியல் யாப்பு, இந்திய அரசியல் யாப்பினை முன்மாதிரியாக கொண்டிருத்தல் வேண்டும். சமாதான முயற்சிகளில் இந்தியாவின் பங்களிப்பு அவசியமானதாகும்.

(2) எமது தாயக நிலப்பரப்பான வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு விசேட (சமச்சீரற்ற) அதிகாரப் பகிர்வு வழங்கப்படல் வேண்டும். அதாவது கனடாவின் கியூபெக் மாநிலத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் சுயாட்சி அமைப்பு முறையை ஒத்ததாக இருத்தல் என்பது பிரதானமான ஒன்றாகும்!

(3) சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசகரும மொழிகள் எனும் அரசியல் யாப்பின் ஏற்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதியான செயற்பாடுகளை முன்னெடுத்தல் வேண்டும்.

(4) வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தொடர்ந்தும் ஒரு தனி நிர்வாக அலகாக இருப்பதுடன், முஸ்லீம் சமூகத்தின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்துவதற்காக எல்லைகள் மீளமைக்கப்பட்ட புதிய அம்பாறை மாவட்டத்திற்கு விசேட ஒழுங்குகள் ஏற்படுத்தல் வேண்டும்.

(5) ஒவ்வொரு மாகாணத்திற்கும் தனித் தனி பொலிஸ் சேவையும், பொதுச் சேவையும் இருத்தல் வேண்டும்.

(6) இலங்கையின் மத்திய அரசாங்கம் சகல இனத்தவர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்!

(7) இலங்கையின் முப்படைகளிலும் நாட்டின் இன விகிதாசாரம் பிரதிபலித்தல் வேண்டும்.

(8) இலங்கையின் உச்ச நீதிமன்றத்திலும், மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும், ஏனைய அனைத்து உயர்பதவிகளிலும் நாட்டின் இன விகிதாசாரம் கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.

(9) இலங்கையின் பாராளுமன்றத்திலும் நாட்டின் இன விகிதாசாரம் பிரதிபலித்தல் வேண்டும்.

(10) இலங்கையின் பாராளுமன்றத்தில் மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டாவது சபை ஒன்று இருத்தல் வேண்டும்.

இத்தகைய எமது நிலைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டே ஜனாதிபதி வேட்பாளராகிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை மனம் திறந்து நடத்தினோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் பல்வேறு கருத்துக்களைக் கொண்ட பெரும்பாலான கட்சிகள் எமது நிலைப்பாட்டை ஆதரிக்கின்றன. ஒரு சில தென்னிலங்கை அரசியற் கட்சிகளுடன், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் ஜனாதிபதித் தேர்தலுக்காக மட்டும் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களை மட்டும் காரணமாகக் கொண்டு, மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி! என்ற, எமது மக்களுக்கான சுயாட்சி அதிகாரத்தை கோரி நிற்கும் நாம், மகிந்த ராஜபக்ஷ அவர்களை எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதிலிருந்து தூரநிற்பதனால் எந்தக் காரியங்களையும் ஆற்றிவிட முடியாது. இது ஆரோக்கியமான அணுகுமுறையும் அல்ல. இன்று அவ் ஒப்பந்தங்களைக் காரணம் காட்டி, பிரச்சாரத்தில் ஈடுபடுவோருக்கு, தமிழ்பேசும் மக்களின் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான எந்த நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகளோ, தீர்வுகளோ அவர்களிடம் இல்லை.

வடக்கு கிழக்கு மாகாண சபையை மீள செயற்படுத்தும் எமது முதலாம், இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்திற்கு தென்னிலங்கையில் உள்ள எந்த அரசியல் கட்சிகளும் எதிர்ப்புத் தெரிவித்து நிற்கவில்லை என்பதை மக்களாகிய நீங்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். கட்டம் கட்டமாகவே நமக்கான அரசியல் தீர்வினை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

தென்னிலங்கை மக்களின் ஆதரவில்லாமல் தமிழ்பேசும் மக்களுக்கான இனத்தீர்வினை கண்டடைய முடியாது என்பதனை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எமது பூரண ஆதரவை அவருக்கு வழங்கிவரும் அதேவேளை, தொடர்ந்தும் நம்பிக்கையுடன் எமது நல்லுறவை வளர்ப்பதன் மூலம் எமது கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதற்கான பின்பலத்தை அவருக்கு வழங்குவோம், அழுத்தமும் கொடுப்போம். கடந்த காலங்களில் இதுபோன்ற எமது அரசியல் அணுகுமுறைகளால் கிடைத்த வெற்றியை அனுபவமாகக் கொண்டு இத்தீர்மானத்தை நாம் எடுத்துள்ளோம்.

தமிழீழம் எனப்படும் தனிநாடு சாத்தியமில்லை என்ற உண்மை உலகளவில் இருந்து, சாதாரண தமிழ் மக்கள் வரை ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகிவிட்டது. புலிகள் தனி நாட்டைத் தவிர மாற்று வழியில்லையென தமிழ் மக்களை ஏமாற்றிக் கொண்டிருப்பது போல் செயற்பட எம்மால் முடியாது.

இன்று பல்வேறு சிங்கள அரசுத் தலைவர்கள் சமஷ்டி அரசியல் தீர்வை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க அவர்களே சமஷ்டி அரசியல் தீர்வை வெளிப்படையாக ஏற்றுக் கொண்ட முதல் அரசியல் தலைவியாவார். சுதந்திரக் கட்சியினது கொள்கையும் சமஷ்டியை அடிப்படையாகக் கொண்டதாகும். தென்னிலங்கையிலுள்ள ஏனைய அரசியல் தலைமைகளும் சமஷ்டி அரசியல் அமைப்பை எதிர்காலத்தில் ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

எமது மண்ணில் ஒரு சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்துவதுதான் எமது விட்டுக்கொடுக்க முடியாத தீர்மானமாகும்! அதை தெளிவாகவே நாம் பிரதமரிடமும் தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடமும் தெரிவித்திருக்கின்றோம்! தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதானால், மத்தியில் யாரிடம் அதிகாரம் உள்ளதோ அவருடன் பேசித்தான் எமது பிரச்சினைக்கு நாம் தீர்வு காண முடியும். அந்த வகையில் சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு நாம் நடத்தப்போகும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தை ஊடாக எமது கோரிக்கைகளை நாம் வென்றெடுப்போம்.

எமது மக்களின் அரசியல் பிரச்சினைகள் உட்பட நாளாந்தப் பிரச்சினைகளுக்கான எமது கோரிக்கைகளை, ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமாகிய மகிந்த ராஜபக்ஷ முழுமையாக ஏற்றுக் கொண்டு செயற்படுத்துவார் என நாம் பூரணமாக நம்புகிறோம்.

தமிழ் பேசும் மக்கள் எமது கோரிக்கையினை ஏற்று தங்களது வாக்குப்பலத்தை சரிவரப்பயன்படுத்தினால் எம்மால் எந்த சக்திக்கும் ஈடாக நமது மக்களின் கோரிக்கைகளை வெல்லமுடியும் என்பதே எமது திடமான நம்பிக்கையாகும்! எமது கோரிக்கைகள் வெல்லப்பட்டு, அமைதிவாழ்வு, நிரந்தரமான அரசியல் தீர்வு சாத்தியமாவது என்பது எமது மக்களின் உறுதியான நிலைப்பாட்டிலேயே தங்கியுள்ளது. எமது வலியை நாமே உணர்ந்து, எமது கோரிக்கைகள் மீதும் எம் மீதும் மக்கள் நம்பிக்கை கொண்டு எழுந்தால் நாளைய பொழுதுகளும் நம்பிக்கையுடன் விடியும்!

நடைமுறைச்சாத்தியமான, தெளிவான பார்வை கொண்ட அணுகுமுறைகளினால் தான் நமக்கான நிம்மதியான வாழ்வையும், சுபீட்சமிக்க எதிர்காலத்தையும் உறுதிப்படுத்த முடியும். இந்த உன்னத பணிக்காகவே ஈ.பி.டி.பி.யினராகிய நாம் தொடர்ந்தும் மக்களாகிய உங்களின் நலனில் நின்று, கொலை வெறிக்கும் அஞ்சாது துணிச்சலுடன் உழைத்து வருகின்றோம். உங்கள் தீர்க்கமான முடிவு நமது மக்கள் அனைவரினதும் வாழ்வைக் கட்டியெழுப்ப தெளிவான பங்களிப்பாற்றட்டும்.

வெறும் உணர்வுகளுக்கு ஆட்பட்டு நமது எதிர்கால சந்ததியை போருக்கும், இரத்தம் சிந்தலுக்குள்ளும் தள்ளிவிட வேண்டாம் என பொறுப்பான வகையில் உங்களில் ஒருவனாகிய நான் கேட்கிறேன். எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்பேசும் மக்களின் நடைமுறைச் சாத்தியமான தெரிவு, கௌரவ மகிந்த ராஜபக்ஷ தான். நீங்கள் அவருக்கு வாக்களியுங்கள், உங்களின் நம்பிக்கையான வாழ்வின் உத்தரவாதங்களுக்காக நாம் பொறுப்பேற்கின்றோம்.!

மக்கள் பணியில்... தோழமையுடன்,

**கே. என். டக்ளஸ் தேவானந்தா,**

**செயலாளர் நாயகம் – ஈ.பி.டி.பி.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்